உலகப் பொதுமறை

# வள்ளுவம்

## தொகுதி–2




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

புலவர் **தீ.விஜயசுதா**

முனைவர் **பா.இராஜ்குமார்**

பேராசிரியர் **க.கருத்தபாண்டி**

திருமதி. **பாரதி அனிதன்**

எழுத்தர் **க.முருகன்**

கவிஞர் **ந.கு.முல்லைச் செல்வன்**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் – மலேசியா.**

---

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-11

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–2)<br>(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்) |
| தொகுப்பாசிரியர் | : | **உடையார்கோவில் குணா.** |
| துணை பதிப்பாசிரியர்கள் | : | புலவர் **தீ.விஜயசுதா**<br>முனைவர் **பா.இராஜ்குமார்**<br>பேராசிரியர் **க.கருத்தபாண்டி**<br>திருமதி. **பாரதி அனிதன்**<br>எழுத்தர் **க.முருகன்**<br>கவிஞர் **ந.கு.முல்லைச் செல்வன்** |
| மொழி | : | தமிழ், ஆங்கிலம் |
| உரிமை–வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன் கோவில்,<br>தஞ்சாவூர்–613 501.<br>தொலைபேசி: 04362268167<br>கைபேசி: 9443938797, 7530002454. |
| அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 318 |
| விலை | : | ரூ.250/– |
| ISBN | : | **978-81-909877-5-2** |
| நூல் வடிவமைப்பு | : | பரிதி பதிப்பகம்,<br>சோலையார்பேட்டை.<br>வேலூர் மாவட்டம்.<br>கைபேசி: 8098908840, 7200693200 |



**க.பாண்டியராஜன்**
தமிழ் ஆட்சி மொழி, தமிழர் பண்பாடு
மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்
தலைமைச் செயலகம், சென்னை–9.

# வாழ்த்துரை

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கேற்ப முழுமனதோடு வேற்று நாடுகளில் எல்லாம் கூட விண்முட்டும் தமிழ் புகழையும், பண்பட்ட தமிழின் சிறப்பையும் பரப்பி வரும் தங்கள் பணி பாராட்டத்தக்கது. மேடைகளில் பேசுவது, ஊர்வலம் வருவது, விழாக்கள் நடத்துவது போன்ற எல்லாவற்றையும் விட என்றும் நிலைக்கும் பொன்றாப் புகழுடைய பெரியோர்களின் திருவுருவச் சிலைகளை அழகாக அமைத்துத் தருவது மிகச் சிறந்ததாகும். அந்த வகையில் தங்கள் நிறுவனம், பல இடங்களில் திருவள்ளுவர் சிலையை நிறுவி வருவதைத் தமிழுலகம் பாராட்டும் என்பதில் ஐயமில்லை.

தமிழக அரசு, அண்மையில் தமிழ் வளர்ச்சித்துறை வளாகத்தில் திருவள்ளுவர் சிலையைத் திறந்துவைத்தது. அதுபோல மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பாக ஒல்காப் புகழ் தொல்காப்பியரின் திருவுருவச் சிலையை சென்னை பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் நிறுவ உள்ளது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவுள்ளது. தமிழகத்தில் எழுச்சி காண இத்தகைய பணிகள் மேலும் மேலும் பெருக வேண்டும். அருகி வரும் தமிழ் உணர்வைப் பெருகச் செய்யும் தமிழ் மன்றங்களின் தங்கள் தமிழ்த்தாய் அறக்கட்டளை சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

*நன்றி!*

அன்புடன்

*13-02-2019*
சென்னை

**(க.பாண்டியராஜன்)**

# பொருளடக்கம்

1. “தத்துவ உலகில் திருக்குறளின் மகிமையும் அதன் முக்கியத்துவமும்
ந.சிவகரன், இலங்கை ... 01

2. திருக்குறள் காட்டும் சமுதாய வாழ்வியலில் அன்பு என்னும் ஆதார சுருதி
டாக்டர் திருமதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம் ... 11

3. “திருக்குறளை மையப்படுத்திய பிரம்மசிறி வீரமணி ஐயரின் இசைப்பாடல்களுக்கு ஆடலாக்கங்கள்”
திருமதி சோபனா தர்மேந்திரா, இலங்கை ... 15

4. திருக்குறள் போற்றும் பெண்ணியம்
திருமதி. சுபா சுப்ரமணியம், மலேசியா ... 22

5. திருக்குறளில் நட்பு
குமாரி. சந்தியா சுந்தரராஜு, ஜொகூர், மலேசியா ... 31

6. திருவள்ளுவரும் வில்லிப்புத்தூராரும்
பொ. வசந்தகுமாரன், இலண்டன் ... 40

7. விடுதலை பற்றிய நோக்கில் திருக்குறளும் சைவசித்தாந்தமும் ஓர் ஒப்பீட்டு ஆய்வு
கோ.தர்ஷிகா, இலங்கை ... 44

8. வாழ்வியல் கவியும் புரட்சிக்கவியும்
முனைவர். திருமதி சுகன்யா அரவிந்தன், இலங்கை ... 51

9. திருக்குறள் காட்டும் வணிகச் சமூகம்
திரு ந.உமாகாந்த், இலங்கை ... 59

10. திருக்குறள் கூறும் பிரபஞ்சவியற் சிந்தனைகள் ஓர் மெய்யியற் பகுப்பாய்வு
திரு.சி.நிரோசன், இலங்கை ... 64

11. திருக்குறளும் பொருளியலும்
பேராசிரியர். கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் ... 74

12. திருக்குறள் காட்டும் மருத்துவச் சிந்தனைகள்
செல்வி பத்மாசனி.குலராஜசிங்கம். இலங்கை ... 83

13. திருக்குறளின் வழிகாட்டலில் அரசியல் தொடர்பாடல்
திரு. சூ.டினேஸ் கொடுதோர், இலங்கை ... 89

14. திருக்குறள் கூறிநிற்கும் ஊடக அறம்
பூங்குழலி பாலகோபாலன், இலங்கை ... 97

15. "திருக்குறள் காட்டும் வியாபார ஒழுக்கம்" ஓர் பகுப்பாய்வு
சிவகரன். ந, இலங்கை ... 106

16. "இலக்கிய உலகில் திருக்குறளின் மகிமையும்;
உலகநோக்கில் அதன் முக்கியத்துவமும்"
வடிவேலு. ஆ, இலங்கை ... 114

17. திருக்குறள் காட்டும் சமூகம்
மொழி பெயர்ப்பு நோக்கில்
செல்வி. ஷேளினா சிவநேசன், இலங்கை ... 121

18. திருக்குறளும் வணக்கத்துக்குரிய ஜி.யூபோப்
அவர்களின் மொழிபெயர்ப்பும்
திருமதி மதுரா சிவகுமரன், இலங்கை ... 127

19. திருக்குறள் வழிகாட்டும் ஆட்சிமுறை
பேராசிரியர். ம. இரகுநாதன், இலங்கை ... 134

20. மனித சமூகத்தின் வாழ்வியலைப் பற்றி
வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறிகள்
முனைவர் சேகர் நாராயணன், பேராக், மலேசியா. ... 139

21. இரட்சணிய யாத்திரிகத்தில் திருக்குறளின் செல்வாக்கு:
அறத்துப்பால் கருத்துக்களை மையப்படுத்திய ஆய்வு
திருமதி. மேரிவினிபிரிடா சுரேந்திரராஜ், இலங்கை ... 148

22. இன்றைய சமூகச்சூழலில் திருக்குறளின் தேவை
கோபிகா சிவபாலன், இலங்கை ... 154

23. திருக்குறள் காட்டும் சமுதாய வாழ்வியலில்
அன்பு என்னும் ஆதார சுருதி
திருமதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம் இலங்கை ... 161

24. இன்றைய சமுகச் சூழலில் திருக்குறளின் தேவை.
கு. சுவாமிநாத சர்மா, இலங்கை ... 165

25. 'திருக்குறளில் கல்வியறிவு போற்றுதல்'
மீனா– மலேசியா ... 174

26. மனிதனாக்கும் வள்ளுவம்
முனைவர் அண்ணாதுரை காசிநாதன், மலேசியா ... 182

27. அரசனின் கடமை உணர்த்துவதில் திருக்குறளும்
அர்த்தசாஸ்திரமும்
ஸ்வஸ்திகா ரவிச்சந்திரன், இலங்கை ... 189

28. திருக்குறளில் சைவசித்தாந்த நெறி
வாசுதேவன் இலட்சுமணன், மலேசியா ... 197

29. கள் தரும் மயக்கம்
புலவர் பொறிஞர் சி.செந்தமிழ்ச்சேய், அமெரிக்கா ... 204

30. திருக்குறளில் நீதி நெறிக் கோட்பாடுகள்
இராம. பெருமாள், ஈப்போ. ... 210

31. இன்றைய சூழலில் மனவலிமையின் அவசியம்
திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
சகிஸ்னா ரவிச்சந்திரன் ... 218

32. "குறள் போற்றும் தனி மனித ஒழுக்கம்
செ. இராசமாணிக்கம், தோகா, கத்தார் ... 224

33. இன்றைய சமூகச் சூழலில் திருக்குறள்
மகேந்திரன், தைப்பிங், பேரா. ... 232

34. திருக்குறளும் தொடர்பாடலும்: ஓர் ஒப்பியல் ஆய்வு
Anatkesika lorance rajakumar, இலங்கை ... 238

35. திருக்குறளும் இன்றைய இளையர்களும்
புலவர் தீ.விஜயசுதா, சிங்கப்பூர். ... 243

36. வள்ளுவர் காட்டும் அரசியல் நெறிகள்
சங்கப்பிள்ளை. வாசுகி, சிங்கப்பூர். .... 249

37. குறள் போற்றும் தனிமனித ஒழுக்கம்
இராகிணி இராமதாசு, சிலாங்கூர் ... 256

38. திருக்குறள் வழிகாட்டும் ஆட்சிமுறை
திருமதி. கவிதா கதிரமலை ... 263

39. திருக்குறள் போற்றும் பெண்ணியம்
திரு செந்தூரான் வாசுதேவன், சிங்கப்பூர் ... 270

40. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை
கோபால் சித்ராதேவி, சிங்கப்பூர். ... 276

41. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை (அன்புடைமை)
கமலேஷ்வரி, பேராக். ... 281

42. வள்ளுவர் கூறும் இல்லறம்
திருமதி. ஜனனி. செந்தூரன், இலங்கை ... 286

43. திருக்குறளில் ‘‘புகழ்’’
வெங்கா (எ) வெங்கடேசன், சிங்கப்பூர். ... 293

44. இன்றைய சமூகச் சூழலில் திருக்குறளின் தேவை
குமாரி. ஜெயந்திமாலா இராமசாமி, பேராக். ... 299

# திருக்குறள் கூறிநிற்கும் ஊடக அறம்

பூங்குழலி பாலகோபாலன்

**14**

## ஆய்வுச் சுருக்கம்

திருக்குறளில் கூறப்பட்ட அனைத்து நெறிமுறைகளும் கருத்துக்களும் அக்காலத்தோடு கருதிச் சொல்லப்பட்டாலும் அது எக்காலத்துக்கும் எந்த நாட்டுக்கும் எந்தச் சூழலுக்கும் பொருந்தக்கூடியதாக அமைகின்றது. ஊடகத்தில் அறம் என்பது மிகவும் அவசியமாக பின்பற்றப்பட வேண்டியதொன்றாகும். திருக்குறள் மூன்று பால்களினால் இணைக்கப்பட்டதாகும். அது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பனவாகும். வாழ்வில் அறத்துக்கு வழங்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தினை உணர்ந்து அறப்பாலுக்கு ஓர் ஆழமான முக்கியத்துவத்தினை கொடுத்துள்ளார் வள்ளுவர். அறத்துப்பால் நான்கு இயல்களைக் கொண்டு அமைவதோடு 38 அதிகாரங்களாக பிரித்து நோக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது பொய்யாமொழிப் புலவர் கூறிநிற்கும் அறமானது எவ்வாறு ஊடக அறத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதினை கண்டறிதலினை ஆய்வு நோக்கமாகக் கொண்டு அமைகின்றது. இந்த ஆய்வின் எல்லையாக அறத்துப்பாலில் காணப்படும் முக்கியமான அதிகாரங்கள் மாத்திரம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அறத்துப்பாலில் குறிப்பிட்ட அறநெறிக் கொள்கைகள், வாழ்வியல் விழுமியங்கள், தத்துவங்கள், போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைவதினால் இவ்வாய்வு உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் கருதுகோள் என்று நோக்கும் போது, திருக்குறள் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாகப் பேசியுள்ளது. அவற்றுள் அறத்துப்பாலில் உள்ள விடயங்கள் ஊடக அறம் பேணப்படுவதற்கு துணைபுரிகின்றன என்பதே ஆகும். தற்காலத்தில் ஊடக அறம், சட்டம், கொள்கை, கோட்பாடு என பல்வேறு சட்ட திட்டங்கள் தோற்றம் கண்டாலும்

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர் கூறிய அறநெறிக் கொள்கைகள் தற்காலங்களில் ஊடகம் நேர்த்தியாகப் பயணிக்க துணைபுரிகின்றன. இந்த ஆய்வின் மூலாதாரங்களாக அறத்துப்பாலில் உள்ள 36 அதிகாரங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சில அதிகாரங்கள் அமைகின்றன. மேலும் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுப் பொருண்மையோடு தொடர்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றன அமைகின்றன. எதிர்காலத்தில் புதிய புதிய நுட்பங்கள், சட்டங்கள் மற்றும் நீதிநூல்கள் தோன்றினாலும் திருக்குறள் எக்காலத்துக்கும் எத்துறைக்கும் பொருத்தமான நூலாகவே அமையும் என்பதோடு இது ஊடக அறம் பின்பற்றப்பட அதிகளவில் துணைபுரியும் நூலாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

திறவுச் சொற்கள் : திருவள்ளுவர், ஊடகஅறம், அறத்துப்பால், இலக்கியம்

## 1.0 அறிமுகம்

இன்றைய காலத்தில் ஊடகத்தின் வளர்ச்சி என்பது மிக வேகமானதாகும். மனிதனின் சிந்தனை செயல் சொல் அனைத்திலும் ஊடகத்தின் பங்களிப்பு காணப்படுவதனை அவதானிக்க முடியும். பாரெங்கும் பரந்து வாழும் பல்வேறுபட்ட மக்களுக்கு செய்திகளை மிக வேகமாக கொண்டு சேர்ப்பவையாக ஊடகங்கள் அமைகின்றன. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையம் என வெவ்வெறு ஊடகத்தின் துணையினைக் கொண்டு ஒரு கோடியில் நடைபெறும் விடயத்தினைக் கொண்டு மறுகோடியில் வாழ்பவரினால் அறிந்து கொள்ள முடியும். தற்காலத்தில் அகில உலகையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் இந்த ஊடக அறத்தின்பால் பயணித்தல் என்பது மிகவும் அவசியமான ஓர் விடயமாகும். இன்றைய உலக வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு இன்றியமையாததாகவே காணப்படுகின்றது. தமிழின் தலையார்ந்த நூல் திருக்குறள் என்பதில் ஐயமில்லை. இது உலகப் பொதுமறை என்றும் அழைக்கப்படுகின்றது. திருக்குறள் என்னும் உன்னத நூல் உலகம் போற்றும் தமிழ் மொழி இலக்கியமாகும்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று இறைவணக்கத்துடன் ஆரம்பித்து திருக்குறள் உலகத் தத்துவத்தை, மனித வாழ்வை, இரண்டடிக் குறளில் உலகத்தவர்களுக்கு எடுத்துச் சொல்கின்றது. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று எண்ணி மகிழ்கின்றான் பாரதியார்.

## 1.1 திருக்குறள்

திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதிணெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் அமைந்துள்ளது. இது ஈரடிகளில் உலகத் தத்துவங்களையும், வாழ்வின் விழுமியங்களையும் சொன்னதால் இது ஈரடி நூல் என்றும் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெரும் நெறிகளைக் கொண்டதால் "முப்பால்" என்றும் அழைக்கப்படுகின்ற திருக்குறள் வாழ்வியலின் எல்லா அம்சங்களையும் இனம், மதம், மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருத்துவதாக அமைவதால் இது உலகப் பொதுமறை எனவும் அழைக்கப்படுகின்றது.

### 1.1.1 திருக்குறளில் அறம்

'முப்பால்' என்றும் திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்று மூன்று பால்களை கொண்டு அமைகின்றது. முப்பால்களாகிய திருக்குறள் 'இயல்' என்னும் பகுதிகளாக ஒவ்வொன்றாகப் பிரித்து மேலும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் குறிப்பிட்ட சில அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றன. அந்த வகையில் அறத்துப் பாலினை நோக்கும் போது பாயிரம், இல்லறவியல், துறவியல், ஊழியல் என்ற நான்கு இயல்களைக் கொண்டு அமைவதனைக் காணமுடிகின்றது.

| இயல் | அதிகாரங்கள் |
|---|---|
| பாயிரவியல் | *4* |
| இல்லறவியல் | *20* |
| துறவியல் | *13* |
| ஊழியல் | *01* |
| மொத்தம் | *38* |

திருக்குறள் அறத்தினை மையப்படுத்தி 38 அதிகாரங்களை கொண்டு அமைகின்றது. மனித வாழ்க்கைக்கு அறம் ஆதாரமாக உள்ளது. அது போல் ஊடகத்துக்கும் அறம் முக்கியமானதொன்றாகவே கருதப்படுகின்றது. அறத்தை அடித்தளமாகக் கொண்ட மனித வாழ்க்கை ஒரு மாளிகை போன்றதாகும். அறம் என்பது கடமை, ஒழுக்கம், புண்ணியம், நீதி, ஈகை, அறக்கடவுள் என்பனவாகும். இதனை 'ஒழுக்கம்' அல்லது 'நற்பண்பு' என தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன.

**"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்தே புகழும் இல" குறள் (39)**

என்று அறத்தின் சிறப்பினை வள்ளுவன் அழகாக கூறுகின்றான். திருவள்ளுவர் அறத்தினை தனிமனிதனுக்குரியது என்று மாத்திரம் நோக்கவில்லை மாறாக அனைவருக்குமானதாகவே நோக்குகின்றார்.

I. தனிமனித அறம்
II. சமுதாய அறம்
III. அரசருக்குரிய அறம்
IV. இல்லறத்துக்குரிய அறம்
V. துறவறத்துக்குரிய அறம்

என்று அறத்தினை ஐந்து நிலைகளில் பிரித்து நோக்க முடியும். வள்ளுவன் உலகத்திற்கு தந்த பொய்யா மொழி திருக்குறள் அனைவருக்கும் பொதுவானதொரு நூலாகும்.

## 1.2 ஊடகம்

இன்றைய காலத்தில் ஊடகத்துறையானது பெரும் வளர்ச்சியை எட்டியுள்ளதோடு பல்வேறுபட்ட விடயங்களை மக்களுக்கு உடனுக்குடன் எடுத்துக்கூறும் சாதகமானதாகவும் அமைகின்றது. இன்று உலகில் மனிதன் பல்வேறு துறைகளில் வளர்ந்து கொண்டே செல்கின்றான். எந்த துறையாக இருந்தாலும் அதனை உலகுக்கு அறிமுகப்படுத்துவது ஊடகங்களே ஆகும். ஊடகங்கள் என்று நோக்கும் போது இது ஒரு நாட்டின் அரசினையே மாற்றக்கூடியதும், பொருளாதாரத்தில் வேகமாக நாடு வளர்ச்சி எய்ய உதவுவதாகவும் அமைகின்றது. எந்த நாட்டில் ஊடகத்துறை முழு சுதந்திரத்துடனும், உரிமையுடனும், பக்கச்சார்பின்றியும், அனைவருக்கும் சமவுரிமை வழங்கி வேறுபாடுகளுக்கு அப்பால்

நடுநிலைமையாக செயற்படுகின்றதோ, அங்கே நாட்டின் வளர்ச்சி என்பது மிகவும் வேகமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமையும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

ஊடகத்தினை பிராதானமாக அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், புதிய ஊடகம், என பிரித்து நோக்க முடியும். எந்த ஊடகமாக இருந்தாலும் அந்த நாட்டின் அரசாங்கத்தின் மக்களின் ஆதரவின்றி இயங்க முடியாது. அது சிறப்பாக இயங்க அரசாங்கத்திற்கு மக்களின் துணை அவசியமானதாகும். அது போல் அரசாங்கமும், மக்களும் இயங்குவதற்கும் ஊடகம் மிகவும் அவசியமானதொன்றாகும்.

## 1.2 ஊடக அறம்

தனிநபர் கடந்து உலகிற்கே தகவல் வழங்கும் ஊடகம் அறத்தின்பால் செயற்படுதல் என்பது மிகவும் அவசியமான விடயமாக அமைகின்றது. தற்கால ஊடகங்கள் சில அறத்தின்பால் செயற்படுகின்ற அதேவேளை ஊடகவளர்ச்சி, வியாபாரம், அரசியல், பிரபலத்தன்மை, என தன் பயணத்தினை மாற்றி ஊடகங்கள் அறத்தினை தவிர்த்து வேறுவழியில் செல்வதினை அவதானிக்க முடிகின்றது. அதனால் தான் வள்ளுவர் அறத்தின் முக்கியத்துவத்தினை அழகாக கூறுகின்றார்.

**"செயற்பாலது ஓரும் அறனே ; ஒருவற்கு**
**உயற்பாலது ஓரும் பழி" குறள் (40)**

ஒருவர் தனக்காகச் செய்யப்பட வேண்டியது எப்போதும் அறமே. நீக்கப்பட வேண்டியது பழியே என சிறப்பாகக் கூறி நிற்கின்றார். அதுபோல ஊடகங்களும் அறத்தின்பால் செயற்பட வேண்டும் அதுவே அதன் தலையாய கடமையாகும். கணவன் மனைவிக்கிடையில் ஓர் அன்பு, அக்கறை காணப்படுவது போல் மக்கள் நலனில் ஊடகங்கள் அக்கறையும் கரிசனையும் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கு ஊடகங்கள் அறத்தின் பால் செயற்படுதல் கட்டாயத் தேவையாகும்.

**"ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து" குறள் (48)**

பிறரையும் அறவழியைப் பின்பற்றச் செய்து, தானும் அறத்தினின்று தவறாமல் வாழும் இல்வாழ்க்கை, தவம் செய்வான்

வலிமையினும் வலிமை உடையதாகும் எனக்கூறி அறத்தின் வலிமையினை வள்ளுவர் கூறிநிற்கின்றார். ஊடகத்தின் அறம் என்பது அதன் இதயமாகும். அறத்தின்பால் ஊடகம் பயணிக்கும் போது அது மக்களின் மனங்களை வெல்ல முடியும். அந்த வகையில் ஊடக அறம் என்று நோக்கும் போது சில முக்கிய விடயங்களினை குறிப்பிட்டுக் கூறமுடியும்.

- நடுநிலையாக தகவல் வழங்குதல்
- இனிமையான விடயங்களை கூறல்
- பயனில்லா விடயங்களைக் தவிர்த்தல்
- மெய்யுணர்ந்து தகவல் வழங்கல்
- கேள்வி ஞானத்தினைக் கொண்டிருத்தல்
- குறிப்பறிந்து தகவல் வழங்குதல்
- அவையஞ்சாமை. உண்மையை பயமின்றிக் கூறுதல்

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

## 1.2.1 நடுநிலையாக தகவல் வழங்குதல்

நடுநிலை என்பது ஊடகத்துக்கு மிகவும் தேவையான அம்சமாகும். திருவள்ளுவர் நடுநிலைமையின் முக்கியத்துவத்தினை பொதுவாக கூறியுள்ளார். அது ஊடகத்துக்கும் முக்கியமான தேவையான ஒன்றாக அமைகின்றது. நண்பர் பகைவர் என்ற வேறுபாடுகளின்றி ஊடகங்கள் செய்திகளை நடுநிலைமையாக இருந்து வெளியிட வேண்டும். இதனை அழகாக திருக்குறள் கூறுகின்றது.

**"தகுதி என ஒன்று நன்றே பகுதியால்**
**பாற்பட்டு ஒழுகப் பெறின்"** **குறள்(111)**

பகைவர், நண்பர், அயலார், ஆகிய யாவரிடத்தும் நடுநிலைமையோடு பொருந்த நடப்பாராயின் அவ்வறம் ஒன்றே எல்லாவிதமான நன்மையையும் பயப்பதாகும் என்கின்றார்.

## 1.2.2 இனிமையான விடயங்களைக் கூறல்

ஊடகங்கள் எப்போதும் இனிமையான விடயங்களைக் கூறவேண்டும். தேவையற்ற விடயங்களை தவிர்த்து தேவையான விடயங்களை கூறுதல் ஊடக அறத்தின் முக்கியமான அறமாகக் கருதப்படுகின்றது.

**"அல்லவை தேய அறம்பெருகும் ; நல்லவை
நாடி இனிய சொலின்" குறள் (96)**

நல்ல சொற்களை ஆராய்ந்து அவற்றை இனிமையாகவும் சொல்வானாயின், அவனுக்குப் பாவம் குறைந்து அறம் வளரும். இனிமையான விடயங்கள் இருக்கும் போது ஊடகங்கள் இனிமையற்ற விடயங்களை கூறும் போது அது ஊடக அறத்தினை மீறும் செயலாகவே நோக்கப்படும். செய்திகள் எவ்வளவு முக்கியமான விடயமானதாகவும் காத்திரமானதாகவும் அமைதல் அவசியமானதாக அமைந்தாலும் அவற்றினை இனிமையாக கூறாமல் விடும்போது அது பயனற்றதாகவே போகும். எனவே கூறவேண்டிய விடயத்தினை இனிமையாகக் கூறுதல் ஊடகத்தின் அறமாக அமைகின்றது. சாதாரணமான தொடர்பாடலில் இனிமையான விடயங்கள் உள்ளடக்குவது அறமாக அமைவது போல ஊடகத்திற்கும் இனிமையான விடயங்களை செய்திகளை வழங்குவதும் அறமாகும்.

## 1.2.3 பயனற்ற விடயங்களை தவிர்த்தல்

ஊடகம் தகவல்களை மக்களுக்கு வழங்கும் போது அது பயனுள்ள விடயமா என்பதினை பரிசீலனை செய்தல் காலத்தின் தேவையாகும். தற்காலத்தில் செய்திக் களத்திற்குச் சென்று செய்திகளைச் சேகரிக்காமல் பயனற்ற விடயங்களினை ஊடகங்கள் வெளியிடுவதனை அவதானிக்க முடிகின்றது. அது ஊடக அறத்திற்கு புறம்பானதாகும். எனவே ஊடகங்கள் பயனுள்ள விடயங்களை மாத்திரம் தமது உள்ளடக்கத்தில் கொண்டிருத்தல் அவசியமானதாகும். அதனை திருவள்ளுவர் சிறப்பாகக் கூறியுள்ளார். இது ஊடகத்துக்கும் பொருத்தமானதாக அமைகின்றது.

**"பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்" குறள்(191)**

பலரும் வெறுக்குமாறு பயனற்ற சொற்களைப் பேசுபவன் எல்லோராலும் இகழப்படுவான்.

## 1.2.4 மெய்மையுணர்ந்து தகவல் வழங்குதல்

ஊடக அறத்தில் முக்கியமானதாக மெய்மையுணர்ந்து தகவல் வழங்குதலும் அமைகின்றது. தவறான பொய்யான விடயங்களை

வெளியிடும் போது ஊடக அறம் மீறப்படுகின்றது. எனவே ஊடகங்கள் தாம் வெளியிடும் செய்திகளை மெய்மையுணர்ந்து வெளியிடுதல் அவசியமானதாகும்.

**"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"** *குறள்(355)*

ஏதேனும் ஒரு பொருள் எந்தெந்த தன்மை உடையதாகக் காணப்பட்டாலும், அதன் தோற்றத்தை மட்டும் கண்டு நீங்காமல் அப்பொருளுக்கு உள்ளீடான உண்மையைக் காணவல்லதே மெய்யறிவாகும். அதனையே ஊடகங்கள் செய்ய வேண்டியது ஊடக அறமாகும்.

## 1.2.5 கேள்வி ஞானத்தினைக் கொண்டிருத்தல்

நூற்பொருளைக் கற்றார் கூறக் கேட்டு அதன் மூலம் அறிவினைப் பெருக்கி ஊடகங்கள் தர்மத்தின் பால் பயணித்தல் என்பது ஊடக அறமாகும். அதற்கு கேள்வி ஞானம் மிகவும் அவசியமாகும். நுட்பமான கேள்விச் செல்வத்தினை உடையவர் அல்லாதவர்கள் யாவரிடத்திலும் பணிவான மொழிகளைப் பேசுதல் என்பது இயலாது. எனவே அனைவரிடத்தும் பண்பாகப் பேசும் தன்மை கொண்டவர்கள் நேர்த்தியான செய்திகளை வழங்க முடியும். நூற்பொருளைக் கற்றார் கூறக் கேட்டல் ஊடகம் அறத்தின் பால் பயணிக்க துணைபுரியும். ஊடக அறம் தொடர்பாக திருக்குறள் மிக அழகாகவும் தெளிவாகவும் கூறியுள்ளது. மேலும் பல அதிகாரங்களிலும் அறம் தொடர்பாக வள்ளுவர் விளக்கியுள்ளதினை அவதானிக்க முடியும்.

- குறிப்பறிந்து தகவல் வழங்கல்
- அவையஞ்சாமை
- இன்னா செய்யாமை
- வாய்மை

போன்ற அறம் சார்ந்த விடயங்கள் ஊடகத்திற்கு மிகவும் அவசியமானவையாக அமைகின்றன. இவற்றினை வள்ளுவர் அறத்துப்பால் மற்றும் பொருட்பால் போன்றவற்றில் அழகாக கூறியுள்ளதினை அவதானிக்க முடிகின்றது. திருவள்ளுவர் அறம் என பொதுவாக கூறிய விடயங்கள் ஊடக அறத்திற்கும் பொருத்தமானதாகவே அமைகின்றன.

## முடிவுரை

உலகிற்கே தகவல் வழங்கும் ஊடகமானது எப்போதும் அறத்தின் பால் பயணித்தல் என்பது கட்டாயமானதொன்றாகும். திருக்குறள் அறத்தின் முக்கியத்துவத்தினை விளக்கி அதன் தேவையினை மிக அழகாக கூறிநிற்கின்றது. அறம் என்பது அனைத்திற்கும் தேவையான ஒன்றாகும். அந்த வகையில் ஊடகத்திற்கு அறம் என்பது இதயம் போன்றதாகும். எனவே, ஊடகம் அறத்தின் பால் பயணிக்க வேண்டும். திருவள்ளுவர் அறத்தின் மகிமையினை மிகத் தெளிவாக கூறிநிற்கின்றார். அவையனைத்தும் ஊடகத்துக்கும் பொருந்தும். ஊடகங்கள் அறத்தினைப் பின்பற்றி மக்களுக்கு சேவை செய்ய திருக்குறள் கூறும் அறநெறிகளை பின்பற்றுதல் என்பது மிக அவசியமாக வேண்டப்படுகின்றது.

## உசாத்துணை :


- தமிழ் இலக்கிய வரலாறு, 2010, மு.வரதராசன், சாகித்ய அகாதெமி, புதுதில்லி1.
- திருக்குறள் (பரிமேலழகர் உரை)
- இளவழகன்.ப., 2008, தமிழ் இலக்கியச் சிகரங்கள் ஐம்பது நர்மதா பதிப்பகம், சென்னை.
- சுப்பிரமயணியன்.ச.வே.,2011, சங்க இலக்கியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.



**பூங்குழலி பாலகோபாலன்**
விரிவுரையாளர்
ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.